# சிறுவர் அமுதம்

**19. 2.97**

கிண்ணம்: 8 எண்ணம்: 2



## சிறுவர் இலக்கிய மாத சஞ்சிகை.

## KINDER LITERARISCHES MAGAZIN.

நிமிர்ந்த நன்னடை நேர் கொண்ட பார்வையும்
நிலத்தில் யார்க்கும் அஞ்சாத நெறிகளும்,
திமிர்ந்த ஞானச் செருக்கும் இருப்பதால்
செம்மை மாதர் திறம்புவதில்லையாம்
—சுப்பிரமணியபாரதி—

அன்புச் சிறுவர் சிறுமியரே,

தை பிறந்து விட்டது. தைத்திருநாளும் வந்து முடிந்து விட்டது. புது வருடம் பிறந்து, எல்லோருக்குமே ஒவ்வொரு வயது கூடி விட்டது. ஒவ்வொரு நாடுகளிலும், ஒவ்வொரு பிரச்சனைகள் தீரும் வேளைகளில், சில புதிதாய்ப் பிறக்கின்றன. சில தீர்க்கப் படாமலே, நம் நாட்டுப் பிரச்சனைகளைப் போல தொடர்கின்றன.

ஒவ்வொருவரும் எடுத்துக் கொள்ளும் முயற்சிகளில் எத்தனை விதமான எதிர்பார்க்கப் படாத பிரச்சனைகளை, தடைகளை, கடக்க வேண்டிய நிலை ஏற்படுகின்றன. சென்ற வருடத்துச் சிறுவர் அமுதம் சஞ்சிகையும், பல பிரச்சனைகளைக் கடக்க வேண்டிய சூழ்நிலைக்குத் தள்ளப்பட்டு விட்டது. ஒன்பது, பத்தாவது சஞ்சிகைகளுக்கான ஆக்கங்களைக் கணணி அழித்து விட்டதுமல்லாமல் தமிழ் எழுத்துக்களும் அழிந்து விட்டன. கணணியில் அவற்றைப் பதிவு செய்தே உங்களுக்குத் தர முடிந்தது.

பதினொராம், பன்னிரெண்டாம் சஞ்சிகைகள் நிதிப் பற்றாக் குறைவினால் சிறிதாக்கப் பட்டு விட்டது. வரும் எந்தத்

நடைகளையும் கடந்து சிறுவர் அமுதம் தொடர்ந்து வெளிவரும். வெளிவர வேண்டும். வாசகர்களாகிய உங்களின் ஊக்குவிப்புடனும், உங்கள் பெற்றோரின் நல்லெண்ணத்துடனும் இதன் பணி தொடரும் என்பதில் சந்தேகமில்லை.

இவ்வருடத்துக்கான, சந்தாப் பணத்தைச் சிலர் தாமாகவே, அனுப்பி விட்டார்கள். அவர்களுக்கு எமது நன்றிகள். மற்ற வாசகர்களும் சந்தாப் பணத்தை அனுப்பி வைப்பது நல்லது. புதிதாகப் சஞ்சிகை எடுக்க விருப்பம் உள்ளவர்களைச் சேர்த்துத் தருவதும் உங்கள் பொறுப்பாகும். ஏனெனில் இது உங்கள் சஞ்சிகை. இதன் வளர்ச்சி உங்கள் கையிலேயே உள்ளது.

-ஆசிரியை-

................................................................................................

உண்மையான கலைஞனுக்கு, வெளித்தோற்றம் ஒருபுறமிருக்க, அகத்தேயுள்ள வாய்மையின் ஒளி வீசும் முகம் தான் அழகைக் கொடுக்கும்.

-மகாத்மா காந்தி-

................................................................................................


................................................................................................

வாழ்க்கை முக்கியமல்ல, வாழ்க்கையில் நீங்கள் காட்டும் மன உறுதிதான் முக்கியம்.

-ஜோன் கேல்ஸ்வொர்த்தி-

................................................................................................

## பாடுபடுபவர்க்கே!!



பாடுபடுபவர்க்கே இந்தப்
பாரிடம் சொந்தமையா!
காடு திருத்தி நல்ல
நாடு காண்பதவரல்லவோ!
மந்திர மோதுவதால் – எங்கும்
வயல் விளைவதுண்டோ?
தந்திரப் பேச்சாலே அரிசி
சாதமாகி விடுமோ!
கட்டும் ஆடையாகப் – பருத்தி
காய்த்தளிப்ப துண்டோ?
சட்டிபானையெல்லாம் – மண்ணில்
தாமே எழுவதுண்டோ!

வேறு

உழுது பயிர் செய்வோன்
வயிற்றுக் குணவு பற்றாமல்
அழுதழுது நிதம் - நிற்ப
தறியீரோ ஐயா!
ஆடை நெய்திடுவோன் - போர்க்கும்
ஆடையில்லாமல்
வாடை கொண்டு நிதம் - கிடந்து
வருந்தலாமோ! ஐயா
வீடு கட்டுமொரு - கொத்தன்
விடுதியில்லாமல்
ஆடுமாடுகள் போல் - உலகில்
அலையலாமோ ஐயா!

கோடிகோடியாக நீங்கள்
குவித்திடும் லாபம்
வாடும் எம் மக்கள் - உண்ணா
வயிற்றுச் சோறல்லவோ!
மனம் திரியாமல் - காலை
மாலை எப்பொழுதும்
குனிந்து வேலை செய்வோர் - கும்பி
கொதிக்கலாமோ ஐயா!
வாழ வேண்டுமெனில் - தொழில்கள்
வளர வேண்டுமையா!!
ஏழை என்றொருவன் - உலகில்
இருக்கலாகாதையா!!

அனுப்பியவர்: சோபி யோகராசா -

## சிவப்பிரகாச சுவாமிகள்

தென் இந்தியாவில் உள்ள காஞ்சிபுரம் என்ற இடத்தில் வாழ்ந்த குமாரசாமி தேசிகருக்கு மூத்த மகனாகப் பிறந்தவர் சிவப்பிரகாசர். இவருக்கு வேலையா, கருணையா என்னும் இரு சகோதரர்களும், ஞானாம்பிகை என்னும் தங்கையும் இருந்தனர்.

சிவப்பிரகாசர் இள வயதிலேயே தமிழ்ப் புலமையில் சிறந்து விளங்கியதோடு, கவிதை இயற்றும் ஆற்றலும் பெற்றிருந்தார். இவர் திருமணம் புரிந்து கொள்ளாமல் துறவு நிலையை மேற் கொண்டிருந்தார். தாமிரவர்ணிக் கரையிலுள்ள சிந்துபூந்துறையில் வாழ்ந்த வெள்ளியம்பலத் தம்பிரானிடம் இலக்கணம் கற்றுக் கொண்டார்.

இவரது புலமையை அறிந்த அண்ணாமலை ரெட்டியார் என்பவர் சிவப்பிரகாசருக்கு முந்நூறு பவுண் பரிசாகக் கொடுத்தார். அதைத் தன் குருவாகிய வெள்ளியம்பலத் தம்பிரானுக்குக் கொடுத்த போது அதைத் தம்பிரான் பெற்றுக் கொள்ளவில்லை. சிவப்பிரகாசரிடம் ""இது எனக்குத் தேவையில்லை. திருச்செந்தூரில் செருக்குக் கொண்டு, மற்றப் புலவர்களை இகழும் கர்வம் கொண்ட புலவன் ஒருவன் இருக்கிறான். அவன் என்னை வந்து வணங்கச் செய்ய வேண்டும். அதுவே நீ எனக்குச் செய்ய வேண்டியது"" என்று சொன்னார்.

தம் ஆசிரியரின் சொல்லை ஏற்றுக் கொண்டு சிவப்பிரகாசர் திருச்செந்தூருக்குச் சென்றார். அங்கு செந்தூர் முருகன் சன்னிதானத்தில், எதிர்பாராத

விதமாக செருக்குடைய புலவரைச் சந்தித்தார். அவரிடம் தான் அவரோடு போட்டியிட விரும்புவதைக் கூறினார். ""நீரோட்டயமகம்"" பாடுவோம். விரைவாகப் பாடி முடித்தவர்களுக்கு மற்றவர் அடிமையாக வேண்டும் என்பது நிபந்தனை போடப்பட்டது. ( நீரோட்டயமகம் என்பது பாடலில் ஒரு வகை)

சிவப்பிரகாசர் முருகக் கடவுள் மீது முப்பது பாடல்கள் பாடி முடித்தார். அதுவரை செருக்குக் கொண்ட திருச்செந்தூர்ப் புலவரால் ஒரு செய்யுள் கூடப் பாட முடியவில்லை. அவர் ""நான் உடன் அடிமை"" என்று ஒப்புக் கொண்டார். அவரை அழைத்து வந்து தன் ஆசிரியரிடம் சிவப்பிரகாசர் ஒப்படைத்தார். வெள்ளியம்பலத் தம்பிரான் சிவப்பிரகாசரை வாழ்த்தினார்.

இவர் பல நூல்களை இயற்றினார். இவரால் இயற்றப்பட்ட ""நன்னெறி வெண்பா"" நாற்பதும் அரிய நீதிகளை, அழகான உவமையுடன் கூடியது. காலத்தாலும் அழியாத எல்லோருமே ஏற்றுக் கொள்ளக் கூடிய இவரது புலமை போற்றத் தக்கது.

நன்னெறி வெண்பாக்களில் ஒன்றைப் பார்ப்போம்:

முனிவினும் நல்குவர் மூதறிஞர் உள்ளம்
கனிவினும் நல்கார் கயவர்-நனி விளைவில்
காயினும் ஆகும் கதலிதான் எட்டி பழுத்து
ஆயினும் ஆகுமோ அறை

வாழைப் பழமானது, நன்றாகப் பழுத்த பழம் தான் உபயோகப்படும் என்பதில்லை. அது காயாக இருந்தாலும் உபயோகப்படும் தன்மை

கொண்டது. எட்டிக் கனி பார்ப்பதற்கு அழகான தோற்றம் கொண்டதாயினும், அதனால் யாருக்கும் பயன் உண்டாவதில்லை. அதுபோல, நன்றாகப் படித்து முதிர்ந்த அறிவுடையவர்கள் மற்றவர்கள் போல் கோபம் கொண்ட போதிலும், அவர்கள் கஷ்டப்படும் போது கொடுத்து உதவுவார்கள். கயவர்கள் இனிமையாகப் பேசினாலும், ஒருவருக்கும் கொடுக்க மாட்டார்கள் என்பது இப்பாடலின் கருத்தாகும்.

-முகுந்தன் மகேந்திரன்-

---

முதல் தரமான மனிதர்கள் கருத்துக்களைப் பற்றிப் பேசி விவாதிக்கின்றனர். சாதாரண மனிதர்கள் நிகழ்ச்சிகளைப் பேசி விவாதிக்கின்றனர். மட்டரகமான மனிதர்கள் மட்டுமே தனிநபர்களைப் பற்றிப் பேசி விவாதிக்கிறார்கள்.

-சீனப்பழமொழி-


---

வன்முறையால் வென்றதில் பாதியை மனிதர்கள் இழந்து விடுகிறார்கள். வாதத்தில் வென்றது தான் என்றும் நிலைத்து நிற்கும்.

-வெண்டெல் பிலிப்ஸ்-

---

# கஞ்சனும் கந்தனும்



ஒரு ஊரில் பிரபு ஒருவர் வாழ்ந்து வந்தார். அவர் யாருக்கும் எந்த விதமான உதவியும் செய்வதில்லை. தனக்கு அதனால் பயன் கிடைக்குமானால் யாருக்கும் உதவி செய்து கொள்ளுவார். அவரை யாரும் சுலபமாக ஏமாற்றி விட முடியாது. யாரோ ஒருவன் இவரையும் ஏமாற்ற வருவான் என்று அவரது மனைவி சொல்லிக் கொள்வாள்.

ஒருநாள் கந்தன் என்னும் வழிப்போக்கன் அவரிடம் வந்தான். அதே வேளையில், வீட்டை நல்ல முறையில் வர்ணம் பூச ஆள் தேடிக் கொண்டிருந்தார் பிரபு. கந்தன் அவரிடம் சிலநாள் அவர் வீட்டில் தங்குவதற்கு அனுமதி கேட்டான். அதற்கான பணத்தைத் தான் தருவதாகக் கூறினான். பணம் கூடுதலாகத் தர வேண்டும் என்று பிரபு பிடிவாதம் செய்தார். மிகுதிப் பணத்திற்கு வேலை ஏதாவது தரும்படி கந்தன் அவரிடம் சொன்னான். வீட்டுக்கு வர்ணம் பூசும் வேலை கந்தனிடம் ஒப்படைக்கப்பட்டது.

அவன் கொடுக்க வேண்டிய பணத்தை விடவும் வேலை மிகவும் கூடுதலாக இருந்தது. வர்ணக் கலவைக்கான பணத்தை மட்டும் அவனிடம் கொடுத்த பிரபு, ஒரு மரப் பெட்டியைக் கொடுத்து அதற்கும் அதே வர்ணத்தைப் பூசும்படியும் கூறினார். சில நாட்கள் பிரபுவின் வீட்டில் தங்கியிருந்த படியால் அவரது கஞ்சத்தனத்தைக் கந்தன் அறிந்திருந்தான். தந்த பணத்தை தான் எப்படியாவது அடைந்து விடத் தீர்மானித்தான்.


பிரபு ஒருமாத காலம் வெளியூரில் தங்கியிருக்க வேண்டி வந்தது. தான் வரும்வேளை வேலை முடிந்திருக்க வேண்டும் என்றும் கூறியிருந்தார்.

கந்தனின் மூளை நுரிதமாக வேலை செய்தது. சுவர்களில் இருந்த வர்ணத்தில் மரப்பெட்டிக்கு மட்டும் வர்ணம் பூசினான். வீட்டுக்கு வர்ணம் பூசவேயில்லை. வெளியூரில் இருந்து திரும்பிய பிரபு ஆனந்தத்தில் மிதந்தார். பெட்டியும் சுவர்களும் ஒரே வர்ணமாக இருந்தது.

தான் கந்தனிடம் இருந்து பெரியவேலை வாங்கிக் கொண்டதாகவும், சம்பளம் கொடுக்காமலே வீட்டை அழகு படுத்தியதாகவும் பிரபு பெருமிதம் கொண்டார். எல்லாம் அறிந்த மனைவியோ தனக்குள் சிரித்துக் கொண்டாள். கந்தனோ காசை எண்ணிப் பார்த்துக் கொண்டு கஞ்சனின் அறியாமையை எண்ணிச் சிரித்தான்.

## சிறந்தவன் யார்?

ஓர் ஊரில் ஒரு மந்திரவாதியும், ஒரு தையல்காரனும், ஒரு சிற்பியும் இருந்தார்கள். அந்த மூவருமே தம்தம் தொழில்களில் மிகவும் திறமைசாலிகளாக இருந்தார்கள். ஒரு நாள் மூவருமே ஒன்றாகச் சந்தித்துக் கொண்டார்கள். மூவருக்கும் இடையே யார் சிறந்தவர்கள்? என்று சண்டை மூண்டது.



மந்திரவாதி மற்ற இருவரையும் பார்த்து "உங்கள் இருவரையும் விட நானே சிறந்தவன் என் மந்திர சக்தியால் எதையும் செய்வேன். பல்லியைப் பாம்பாக்குவேன். கல்லைப் பணமாக்குவேன். உடலுக்கும் உயிர் கொடுப்பேன்"என்று கூறினான். அதற்குச் சிற்பி "உன் உருவத்தைக் கல்லில் வடிப்பேன். எப் பொருளாயினும் அதற்கெல்லாம் உருவம் கொடுப்பேன். இதனால் நானே உங்களில் இருவரையும் விடச் சிறந்தவன்" என்று கூறினான்.

அவர்கள் இருவரது வாதத்தையும் கேட்ட தையல்காரன் "நீங்கள் எப்படிச் சிறந்தவர்களாக இருந்தாலும் என்ன? உங்கள் இருவரது மானமும் என் கையில் அல்லவா இருக்கிறது. உங்கள் மானத்தைக் காப்பதற்கு உதவுவது நான் தைக்கும் ஆடைகள் தானே! மானம் இன்றி மனிதர்கள் வாழ


முடியுமா? அதனால் நான்தான் சிறந்தவன்." என்று வாதம் செய்தான். மூவரும் அந்த ஊரிலுள்ள பெரியவரிடம் சென்றார்கள்.

அவ்வூர்ப் பெரியவரும் அவர்கள் கூறுவதைக் கேட்டுவிட்டு, நீங்கள் மூன்று பேரும் உங்கள் திறமைகளைக் காட்டுங்கள். இறுதியில் யார் சிறந்தவன் என்று தீர்ப்புக் கூறுகின்றேன்" என்றார். சிற்பி தன் திறமையைக் காட்டத் தொடங்கினான். ஒரு சிங்கத்தின் சிலையைச் செதுக்கினான். அதைப் பார்த்துக் கொண்டிருந்த மக்கள் எல்லோரும் சிங்கம் மாதிரியே இருக்கிறதே என்று வியந்தார்கள்.

தையல்காரன் அதற்குத் தன்கைவரிசையைக் காட்டினான். அதற்கு பிடரி மயிர் வைத்து, நல்ல முறையில் ஆடை தைத்துப் போட்டான். "ஓ, உண்மையான சிங்கமாகவே தோற்றமளிக்கிறதே! என்று ஆரவாரம் செய்தார்கள். பார்த்துக் கொண்டிருந்த மந்திரவாதியோ எரிச்சல் கொண்டான். உரக்கச் சிரித்துக் கொண்டான். " எல்லாம் செய்தார்கள். இவர்களால் இதற்கு உயிர் கொடுக்க முடியுமா? இதோ, பார்" என்று சொல்லிக் கொண்டே, மந்திரத்தால் அதற்கு உயிர் கொடுத்தான்.

உயிர் பெற்ற சிங்கமும் எழுந்து நின்று கர்ச்சித்தது. அதைக் கண்ட மக்கள் பயந்து ஓடித் தங்கள் தங்கள் வீடுகளில் ஒளிந்து கொண்டனர்.

சிங்கம் அருகில் நின்ற மூவரையும் பாய்ந்து கொன்றது. மக்கள் தந்திரத்தால் சிங்கத்தை ஒருவாறு கூட்டில் அடைத்தனர். அதன் பின் மக்கள் எல்லோரும் ஒன்று கூடினர். இறந்தவர்களுக்கு அனுதாபம் தெரிவித்தனர்.



அக்கூட்டத்தில் இறுதியாகப் பெரியவர் கிராமத்து மக்களைப் பார்த்துப் பேசினார், "அறிவும், விவேகமும் இருந்தால் மாத்திரம் போதாது. அதனால் அழிவு ஏற்படாதவாறும் அவற்றைப் பிரயோசனப் படுத்த வேண்டும். எந்த விஷயமானாலும் அறிவின் துணைகொண்டு நல்ல வழிகளில் நல்லெண்ணத்துடன் பயன்படுத்த வேண்டும். இறந்த மூன்று பேர்களும், தமது திறமைகளை நல்ல வழிகளில் காட்டியிருப்பின் நாட்டிற்கு நன்மை உண்டாகியிருக்கும். அறிவினால், அகந்தை உண்டாகி, அது அவர்களையே அழித்து விட்டது."

— துஷிபன் அருள்நீதன் —

# வாழ்வில் புகழ் தேடு.

காலம் உனக்குக் கை கொடுக்கும்
கடமை என்றும் பலன் கொடுக்கும்
ஞாலம் புகழ நீ வளர..........
நாளும் உழைப்பே வளம் கொடுக்கும்.

உன்னை நீயும் நம்புகையில்
உலகம் உன்றன் பின்வருமே
என்றும் முயற்சி கொண்டிருந்தால்
ஏற்றம் வாழ்வில் ஒளிதருமே

இன்பம் துன்பம் பாராமல்
இலக்கைக் கொண்டு செயற்பட்டால்
உண்மை வெற்றி நிரந்தரமாய்
உயர வைக்கும் தெரியாதா?

ஒவ்வோர் நாளும் நீ செய்யும்
உயர்ந்த செயல்கள் யாவையுமே
எவ்வாறேனும் ஒரு நாளில்
ஏற்றம் உனக்குத் தந்து விடும்.

நெஞ்சில் நேர்மைத் திறமோடு
நினைவில் தூய நினைவோடு
அஞ்சி வாழா உரமோடு
அழகு வாழ்வில் புகழ் தேடு
-சென்னிமலை தண்டபாணி-



## பழமொழிகள் சில:

*1 ஏட்டுச் சுரக்காய் கறிக்கு உதவாது.*
அனுபவம் இல்லாத அறிவு பயன் தராது

*2. கற்றது கைமண்ணளவு. கல்லாதது உலகளவு.*
படிக்க வேண்டியவை நிறைய இருக்கின்றன.

*3. கிணற்றுத் தவளைக்கு நாட்டு வளப்பம் ஏன்?*
தேவையற்ற விடயங்களில் தலையிடுதல் கூடாது.

*4. காற்று உள்ள போதே தூற்றிக் கொள்.*
சந்தர்ப்பத்தைத் தவற விடுதல் கூடாது.

*5. குற்றம் பார்க்கில் சுற்றம் இல்லை.*
சுற்றத்தவர் செய்யும் பிழைகளைப் பொறுத்தல் வேண்டும்.

—சோபி ஜோகராசா —

---

எல்லோரும் உங்கள் வழியில் தொடர்ந்து வர வேண்டுமா? எந்நேரத்திலும் கோபப்படாதீர்கள். எவரையும் மிரட்டாதீர்கள். எவரிடமும் அநியாயமாக நடந்து கொள்ளாதீர்கள்.

-கார்லியோன்-

---




## சேர்ந்து விளையாடு

பக்கத்து வீட்டு மாமி முரளியை அழைத்துக் கொண்டு வந்தாள். "அதோ பார், அருணன் பந்து விளையாடுகின்றான். போய் விளையாடு. அம்மா கடைக்குப் போய் விட்டு வருகின்றேன்." என்றாள். முரளி அருணனிடம் வந்தான். பக்கத்து வீட்டுமாமி போய் விட்டாள். அருணன் தன் பந்தை முரளியிடம் கொடுக்கவே மறுத்து விட்டான்.

இருவரும் பந்துக்காகச் சண்டை போட்டனர். உள்ளே இருந்து அருணனின் அம்மா வந்தாள். "அருணா, அதோ, எங்கள் பூனைக்குட்டிகள் இரண்டையும் பார். எவ்வளவு ஒற்றுமையாக விளையாடுகின்றன. உனக்குப் பூனைக்குட்டி விருப்பமல்லவா! அந்தப் பூனைக்குட்டிகளைப் போல நீங்களும் சேர்ந்து விளையாடுங்கள்" என்றார். அருணன் முரளியோடு சேர்ந்து பந்து விளையாடினான்.

# அப்பாவும் மகனும்



அப்பாவும், மகனும் திருவிழாவுக்குச் சென்று விட்டு வீட்டுக்குத் திரும்பிக் கொண்டிருந்தனர். மகனுக்கு நடக்கக் கால் வலித்தது. "அப்பா, கால் வலிக்கிறது. அதோ அந்தக் காரில் போவோம்" என்றான். அப்பா வாடகைக் கார்ச்சாரதியிடம் கேட்டார். அவன் "பத்து ரூபாய் தந்தால் ஏற்றிச் செல்லலாம்" என்றான். நடந்து கொண்டே அப்பா

சொன்னார் "ஆட்டோரிக்ஷா" வந்தால் ஏறிப் போவோம்."

சிறிது தூரத்தில் ஆட்டோ ரிக்ஷா வந்தது. மகன் "அப்பா, அதோ! ஆட்டோ ரிக்ஷா. நிறுத்துங்கள்." என்றான். அப்பாவும் ரிக்ஷாவை நிறுத்தினார். ஏழுரூபாய் தந்தால் ஏறும்படி கூறினான். "வேண்டாம் மகனே, பஸ்ஸில் ஏறிப்போவோம்" என்றார். மகனும் சம்மதித்தான். இருவரும் மேலே நடந்தனர்.

இடையில் பஸ் வந்தது. "பஸ் வருகின்றது, ஏறுவோம், அப்பா. கால் நன்றாக வலிக்கிறது." அழாத குறையாக மகன் சொன்னான். "பஸ்ஸில் கட்டணம் இரண்டுரூபாய்" என்றார் டிக்கட் கொடுப்பவர். "அதோ, தெரிகின்றதே, சந்தி. இடது பக்கம் திரும்பினால் நமது வீடு வந்து விடும். நமக்கு இன்று இருபது ரூபாய் இலாபம். வீட்டுக்கு நடந்தே வந்து விட்டோம் பார்த்தாயா?" என்றார் அப்பா. எதுவும் விளங்காமலே "ஆம்" என்றான் மகன்.

ஊக்கம் நிறைந்த உழைப்பு, தன்னம்பிக்கைக் குறைவால் ஏற்படும் தடுமாற்றத்தை முறியடித்து விடுகின்றது. ஊக்கம் நிறைந்த உழைப்பு பிரச்சனைகளின் போது, நேர்மை தவறாமல் வெற்றி தரும் முயற்சிகளில் நம்பிக்கையுடன் ஈடுபட வைக்கிறது.

-யாரோ-

## சிங்கம்

சிங்கம் ஒரு காட்டு மிருகம். மிகவும் பலம் உடையது. சிங்கம் வேகமாக ஓடும். மணித்தியாலத்துக்கு நாற்பது மைல் வேகத்துடன் ஓடும். ஆறடி உயரமுள்ள மதிலையும் சிங்கம் பாய்ந்து தாண்டி விடும். சிங்கம் ஒரே பாய்ச்சலில் இருநூற்றி இருபது அடிவரை பாயும். இது இறைச்சியை விரும்பி உண்ணும். மற்றைய மிருகங்கள் ஒதுங்குவது போல சிங்கம் ஒதுங்குவதில்லை. ஆண் சிங்கத்தின் மயிர் அடர்த்தியாக இருக்கும்.

--கௌரிசங்கர் சரவணபவன் –

# பாப்பா பாரதி (வீடியோ சிறுவர் சஞ்சிகை)

-ஒரு கண்ணோட்டம்-

புலம் பெயர்ந்து வாழும் தமிழர்களுக்கு முன்னால் இருக்கும் பெரியதொரு கேள்விக்குறி எங்கள் சிறுவர்களின் எதிர்காலம் பற்றியதே. அந்நிய மண்ணில் இரண்டாந்தரப் பிரஜைகளாக வாழும் எமக்கு, எம் குழந்தைகளுக்குத் தாய்நாடு, தாய்மொழி பற்றிய சிந்தனைகளை வளர்த்து விட வேண்டிய மிகப் பெரிய பொறுப்பு இருக்கிறது. இதைப் பற்றி எம்மில் எவ்வளவு பேர் சிந்திக்கிறோம்? புகலிட நாட்டு மொழியை மட்டும் தன் குழந்தை கற்றால் போதும் அதுவே தமக்குப் பெருமை எனப் பறைசாற்றிக் கொள்ளும் பெற்றோர் எத்தனை பேர்? இப்பேர்ப்பட்டவர்கள் மத்தியில் தமிழ் மொழியைக் கற்பிக்கப் பாடுபடுவோர் பாடு பெரும் கஷ்டமாகத்தான் உள்ளது.

வெளிநாடுகளில் வாழும் குழந்தைகளுக்காக அவர்களுக்கேற்ற வகையில் பாட்டு, கதை, கட்டுரை போன்ற ஆக்கங்களின் தேவை மிகவும் அதிகமாக உள்ளது. மற்றைய மொழிகளில் "சிறுவர் இலக்கியம்" வளர்ந்த அளவுக்கு தமிழில் வளரவில்லையே என்ற குறை எப்பொழுதும் எனக்கு உண்டு. அதுவும் இருகலாச்சாரத்துள் அல்லல்பட்டு வாழும் தமிழ் சிறார்களின் மொழியறிவை வளர்க்க போதுமானளது கற்பித்தல் உபகரணங்கள் இல்லையே எனக் கவலைப் பட்ட நேரத்தில்தான் "பாப்பா பாரதி" என்ற குழந்தைகளுக்கான வீடியோ பத்திரிகை என் கையில் கிடைத்தது.

அவுஸ்திரேலியாவில் தமிழ்ப் பாடசாலையாக இயங்கும் "பாரதி பள்ளி"யின் வெளியீடான மேற்குறிப்பிட்ட வீடியோ பத்திரிகையின் முதலாம் பாகமும், அண்மையில் இரண்டாம் பாகமும் எனக்குக் கிடைத்தன. மாவை நித்தியானந்தன், C.S. யோகானந்தன் இவர்களின் இயக்கத்தில் வெளியிடப் படும் இப்பத்திரிகை பற்றிய சிறு விமர்சனமொன்று முன்வைக்க விரும்புகிறேன்.

எமது சிறார்களுக்குப் பயன்படக் கூடிய வகையில் பாடல்கள், கதைகள், கதைப்பாட்டுக்கள் என்பன இப்பத்திரிகையில் இடம் பெற்றுள்ளன. குறிப்பாக இரண்டாம் பாகத்தில் ஆறு, ஏழு வயதுப்பிள்ளைகள் பார்த்துப் பாடி மகிழக் கூடிய பல பாடல்களும், கேட்டு சொல்லி மகிழக் கூடிய பல கதைகளும் இடம் பெற்றிருந்தன. இதில் கதைகள் சொல்லப்பட்ட விதம், மொழி நடை என்பன சிறுவர்களுக்கு விளங்கக்கூடிய தன்மையிலும், கவரக்கூடிய தன்மையிலும் அமைந்திருந்தன. இரண்டாம் பாகத்தில் சிறிது வளர்ந்தோர்களுக்கு ஏற்ற வகையில் பல விடயங்கள் காணப்பட்டன.

இரு பாகத்திலும், இடம் பெற்ற குதிரையும், கொரில்லாவும் கதைகள் குழந்தைகளைப் பெரிதும் கவரும் தன்மையில் இருந்தன. நகைச்சுவையோடு புனையப்பட்ட இக்கதைகளில் நடிகர்களின் குரல்வளம், பொருத்தமான ஆடைகள் என்பனவற்றால் குழந்தைகளைக் கவர்ந்தது மட்டுமல்லாமல், அறிவு புகட்டுவனவாயும் அமைந்திருந்தன. இரண்டாம் பாகத்தில் நடைபாதை விதிமுறைகளும், சின்னச்சிட்டுவின் கதையும், நமது சிறுவர்கள் தாம் வாழும் தேசத்து மொழியில் அறிந்திருந்த போதிலும், தமிழில் சொல்லியபோது சுவை கூடியிருந்தது.

பொம்மைப்பாட்டு, பறைப்பாட்டு, போன்றவற்றின் இசையமைப்பு, பாடல்களின் வரிச்சிறப்பு வரவேற்கத்தக்கது. கோமாளி மாமாவும் சிறுவர்களினதும் நடிப்பு நன்றாக அமைந்தது. எந்த ஒரு நிகழ்விலும், செயலிலும் நிறைவுகளும், குறைகளும் இருக்கும். கவனிக்கப் படவேண்டிய விஷயங்கள் இதிலும் உண்டு. பங்கு பற்றும் மாணவர்களின் தமிழ் உச்சரிப்பு மிகவும் கவனிக்கப்பட வேண்டியதொன்று. இரு பாகங்களிலும் பாடிய பாரதி பாடல்களின் உச்சரிப்பைப் பாடிய பெரியவர்கள் கூடச் சரியாக உச்சரிக்கவில்லை என்றே கூறலாம்.

ஆங்கிலம் கலந்த தமிழ், ஆங்கிலத்தமிழ் உச்சரிப்புக்கள், தவிர்த்துக் கொள்வது நல்லது. சிறுவர்களை நடிக்க வைப்பது கடினம். ஆனாலும் சிறுவர்களின் நடிப்பில் முகபாவம் இன்னும் தேவை. செயற்கைத் தனமாக இல்லாமல், இயற்கையான நடிப்பாற்றல் கொண்டதாக அமைந்திருப்பது நல்லது.

சொல்வது எளிது என்பதும் செயல்படுத்துவதன் கஷ்டங்களும் எல்லோருக்கும் தெரிந்ததை தான். தொழில் நுட்பங்கள் வளர்ச்சியின் காரணமாகப் பல வசதிகளைப் பெற்றுக்கொள்ளும் வாய்ப்புக்களைக் கொண்டு சிறப்பாக அமைக்கலாம் அல்லவா? இயந்திரமயமாகி வாழும் அந்நிய நாட்டுச்சூழலில், எம் சிறுவர்களின் எதிர்காலத்தை மனதில் கொண்டு, தமது பங்களிப்பைச் செய்து வரும் "பாரதி பள்ளி"யினருக்கு வாழ்த்துக்களைக் கூறிக் கொள்ளும் அதேவேளையில், அடுத்து வரும் வீடியோ பத்திரிகை மேலும் சிறப்பாக அமையும் என்று எதிர்பார்க்கிறேன்.

எழுதியவர்: திருமதி. மல்லீஸ்வரி ஆதவன்—
டென்மார்க்.

வினாவிடைப் போட்டி விடைகள்.

1.காற்று, நெருப்பு, நிலம், நீர், ஆகாயம் இவைகள் எல்லாவற்றையும் சேர்த்து இப்படியும் அழைப்பார்கள். பெயர் என்ன?

பட்டினி, மஞ்சள், ஆச்சரியம், பூவரசு, பதக்கம், பங்கம், நகம், வெள்ளம். (பஞ்சபூதங்கள்)

2.இலங்கையின் வட பகுதியை ஆண்ட அரசர்களின் தலைநகர் எது?

நங்கூரம், எல்லாவன், கல்லூரி, வானூர்தி. (நல்லூர்)

3.நன்னெறி என்னும் நீதிநூலின் ஆசிரியர் யார்?

சிலம்பு, செவ்வந்தி, பருப்பு, கபிலர், பிரவாளம், அதிகாரி, சந்தேகம், புதுசு, பூவாசம், அம்மி. (சிவப்பிரகாசசுவாமி)

4.முதல் முதல் விண்வெளிப் பயணத்தில் பிரயாணம் செய்த நாயின் பெயர் என்ன?

சாலையோரம், சந்திரிகா. (லைகா)

5.தலையைத் திருப்பாமலே பின்புறம் நடப்பதை அறியும் பிராணி எது?

ஒழுங்கு, முட்டை, படை, பச்சோந்தி, துளசி, சிவிகை, கிடங்கு, கிலேசம். (ஓட்டைச்சிவிங்கி)

**எழுதியவர்கள்.**


1. முகுந்தன் மகேந்திரன் Berg. gladbach
2. சிவகரன் .V Denmark
3. புகழ்ராஜ் யோகராசா Norwey
4. சோபி யோகராசா Norwey
5. மோகன் இரத்தினசபாபதி Eschelbronn
6. ஜெயமாலா இரத்தினசபாபதி Eschelbronn
7. ஜெயதீபா இரத்தினசபாபதி Eschelbronn
8. ஜெயானந்தன் கண்ணன் Berg. gladbach
9. மஞ்சுளா சிவசம்பு Lohmar
10. சுஜீனா சண்முகலிங்கம் Clausthal
11. ஜெயசாந் மனோரஞ்சிதராஜா Münster
12. கிசாந் மனோரஞ்சிதராஜா Münster
13. நிரோஷினி ஹரிச்சந்திரன் Wildemann
14. கௌரிசங்கர் சரவணபவன் Solingen
15. தர்சன் சரவணபவன் Solingen

---

அழுக்குப் படிந்து, கிழிந்து, அசிங்கமாகக் கீழே கிடந்தாலும், மனிதனிடம் மதிப்பைப் பணம் பெற்று விடும். அந்த நிலையை மனிதன் அடைவதில்லை.

---

# பசியின் குணம்



மங்கலம் கிராமத்தில் மூன்று நண்பர்கள் இருந்தனர். அவர்கள் அந்தக் கிராமத்திலேயே நன்கு படித்தவர்கள். அதனால் அவர்களை கிராமத்து மக்கள் மிகவும் மதிப்புடன் நடத்தினார்கள். அவர்களும் கிராமத்தில் மன்னர்களைப் போல மிடுக்குடன் வாழ்ந்து வந்தனர். அவர்களுள் திருஞானம் கிராம அதிகாரியாக இருந்து ஓய்வு பெற்றவர். இரண்டாமவரான சத்தியமூர்த்தி வக்கீலாக இருந்து ஓய்வு பெற்றவர். மூன்றாமவரான துரை சிறந்த கவிஞராக இருந்தார்.

மூவருமே ஒரே தெருவில் பக்கத்துப் பக்கத்து வீடுகளில் குடியிருந்தனர். அவர்களுடைய வீட்டுக்கு எதிர்வீட்டில் மதுரநாயகம் என்னும் விவசாயி குடியிருந்தார். தானுண்டு தன் தொழிலுண்டு என்று வாழ்பவர். நண்பர் மூவருக்கும் இருந்து வரும் கர்வத்தை அவர் அறிவாரானாலும், அதைப் பற்றி அவர் கவலை கொள்வதில்லை.

ஒரு நாள் ஒரு பிச்சைக்காரன் பசியோடு திருஞானம் வீட்டுக் கதவைத் தட்டினான். "ஐயா, பசிக்கு ஏதாவது தாருங்கள்" என்று இரந்து கேட்டான் பிச்சைக்காரன். "நீ படித்திருக்கிறாயா?" என்று தொடர்பில்லாமல் கேட்டார் திருஞானம். "ஐயா, பசிக்கு உணவு கேட்டால் படிப்பைப் பற்றிக் கூறுகிறீர்களே! என்றான் பிச்சைக்காரன். அதற்குத் திருஞானம் "முட்டாளே, படித்திருந்தால் ஏன் நீ இப்படிப் பிச்சை எடுக்க வேண்டும். இனியாவது படி" என்று கூறிக் கொண்டே கதவைச் சாத்திக் கொண்டார்.

பக்கத்து வீடான சத்தியமூர்த்தியிடம் சென்றான் பிச்சைக்காரன். வக்கீலான அவரோ தன் பாணியிலேயே அவனிடம் " உனக்குச் சாப்பாடு தர என்னால் முடியும். நீ, பசியோடு தான் இருக்கிறாய் என்பதற்குச் சாட்சி உண்டா? என்று கேட்டார். இரண்டு நாட்களாகச் சாப்பாடில்லை. வயிற்றுவலியால் துடிக்கிறேன்" என்று அழுதான் பிச்சைக்காரன். "போய் வைத்தியரிடம் காட்டு. சமிபாடுக் குறைவாலும் வயிற்றில் வலி ஏற்படும். பசி தானென்றாலும் வைத்தியர் எழுதித் தருவார். அதைக் கொண்டு வா. உணவு தருகிறேன்" என்றார்.

அடுத்த வீட்டுக்குச் சென்றான் பிச்சைக்காரன். கவியான துரையோ, பசியைப் பற்றி நினைக்காதே. உலகில் எத்தனை விதமான காட்சிகள், கற்பனைகள், பாடுகிறேன். கேள். பசியே பறந்து விடும்" என்று கற்பனையோடு பாடினார். வேதனைப் பட்டுக் கொண்டே எதிர் வீட்டுக்குச் சென்றான் பிச்சைக்காரன். விவசாயியான மதுரநாயகம் அவனுடைய பசிக்கு உணவளித்தார். எதிர் வீட்டுக்காரர்களிடம் தனக்கு நேர்ந்த அனுபவத்தைப் பிச்சைக்காரன் அவரிடம் சொன்னான்.

ஒருநாள் மதுரநாயகம் எதிர் வீட்டுக்காரர்களை விருந்துக்கு அழைத்தார். மூவரோடும் நெடுநேரம் கதைத்துக் கொண்டிருந்தார். "வெகுநேரம் கதைத்துக் கொண்டிருந்து விட்டோம். பசிக்கிறது சாப்பிடுவோமே" என்றார் திருஞானம். அவருக்கு முன் சில புத்தகங்களைப் போட்டார். "படியுங்கள். பசி போய் விடும்" என்றார். சத்தியமூர்த்தியிடம் "பசிக்கிறதானால் நிரூபித்துக் காட்டுங்கள்" என்றார். துரையிடம், "உங்களுக்குத்தான் கற்பனைத் திறனுள்ளதே, கற்பனைக்குள் பசியைப் போக்க முடியுமல்லவா?" என்றார். மூவருமே வெட்கப்பட்டனர். தாம் செய்த தவறை ஒப்புக் கொண்டனர். அன்று முதல் திருந்தி வாழத் தொடங்கினார்கள்.

.........................................................................................................

தீங்குகளுக்கு மருந்து உண்டு. அவற்றை உடனே மறந்து விடுங்கள்.

-லத்தீன் பழமொழி-

.........................................................................................................

# சொற்களைக் கண்டு பிடியுங்கள் முடிவு

| | | |
|---|---|---|
| இ—லை | லை—இ | நிலை |
| நாடி | நடி | |
| நந்தவனம் | தானம் | தீ—மே |
| தவனம் | கறை | விலாங்கு |
| வனம் | சார | குங்குமம் |
| தீபம் | பாசி | மடி |
| மத்து | கற்பூரம் | பாட்டி பயிர் |
| வங்கம் கம் | பூரம் | அணி |
| பல் | பாகு நுங்கு | படம் |
| தானம் | பணி | சுகி தாமரை |
| கிண்ணம் | சரை | மரை |
| பாசறை | காலணி | கணம் |
| பாயிரம் | அடி | சக்கரம் |
| பளிங்கு | தாறு | காம் |
| குரு குருடி | தாம் | தாழ் |
| அணி | சாம்பல் பல் | நில் |
| காரை | | |
| சதா தட்டம் | மே—தீ | தனிச்சொல் |
| மங்கு | நாளம் | நா, பா, தா, |
| லம்பாடி | மனம் | பூ, சா, தீ |
| பாடி | தம் | லை |
| சேறு தாகம் | தாய் | |
| விம்மல் | படி | |
| சாரம் | துளசி | |
| | தவம் வங்கி | |
| | குளம் கண் | |
| | பூங்காற்று | |
| | காற்று | |
| | நுரை தீபம் | |
| | சங்கம் பால் | |

## விடை எழுதியவர்கள்:

1. திபாகரன் ரவிக்குமார் Denmark
2. தர்சன் சரவணபவன் Solingen
3. கௌரிசங்கர் சரவணபவன் Solingen
4. ஹிரோஷினி ஹரிச்சந்திரன் Wildemann
5. சிவகரன் .V Denmark
6. கிரிசாந் மனோரஞ்சிதராஜா Münster
7 ஜெயசாந் மனோரஞ்சிதராஜா Munster
8. சுஜீவா சண்முகலிங்கம் Clausthal
9. சுஜீவ் சண்முகலிங்கம் Clausthal
10. மஞ்சுளா சிவசம்பு Lohmar
11. ஜெயவர்தன் கணேசன் Berg. gladbach
12. ஜெயதீபா இரத்தினசபாபதி Eschelbronn
13. ஜெயமாலா இரத்தினசபாபதி Eschelbronn
14. மோகன் இரத்தினசபாபதி Eschelbronn
** 15. விசிகரன். வி Denmark
16. விஜிதா. வி Denmark
17. தூஷியன் அருள்நீதன் Brilon
18. சோபி யோகராசா Norwey
19. புகழ்ராஜ் யோகராசா Norwey
20. பிரகாஷ் கந்தவனம். Norwey
21. சுகந்தி வரதராசா Hahnenklee
22. முகுந்தன் மகேந்திரன் Berg. gladbach
23. கௌரியன் சிவானந்தராஜா Elsdorf
24. லக்சன் சிவானந்தராஜா Elsdorf

** இந்த அடையாளம் இடப்பட்டவர்கள் புத்தகப் பரிசுக்குரியவர் ஆகிறார்கள்.

# மழலை இசை



குடை பிடித்துச் செருப்புமிட்டு
புத்தகமும் கொண்டு
குடுகுடென நடந்து வரும்
குழந்தைகளே கேளீர்!


மழைக்காலம் வழி வழுக்கும்
மிகக் கவனம் மக்காள்!
வழியருகே வெள்ளமுண்டு
விலகி வர வேண்டும்

வெள்ளத்தில் கல்லெறிந்து
விளையாட வேண்டாம்
வீண் சண்டையால் வழுக்கி
விழுந்தெழும்ப வேண்டாம்

கண்மணிகாள் நீர்ச் சிரங்கு
காலில் வரும் கவனம்
கண் உறக்கம் இல்லாமல்
கதறி அழ நேரும்

அம்மா சொல் தட்டாமல்
ஆசிரியர்க் கடங்கி
ஆசையுடன் பள்ளியிலே
படித்து வர வேண்டும்

-சோபி யோகராசா-




# NEKTAR FÜR KINDER